செய்தி வெளியீடு எண்: 143/2018 நாள்: 11.03.2018

**வேலூர் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித்துறை விரிவாக்க பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிஅ.ராமன் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**

வேலூர் மாவட்டத்தில் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் பட்டு புழு வளர்ப்புகளில் விவசாயிகள் ஈடுபட்டு தங்களுடைய பொருளாதராத்தில் உயர்ந்து வருகின்றனர். இந்த பட்டு புழு வளர்ப்பு விவசாயத்தை காட்பாடி வட்டம் வண்டரந்தாங்கல் ஊராட்சியில் திரு.புருஷோத்தமன் என்ற விவசாயின் மல்பெரி தோட்டத்தில் பட்டு புழு வளர்த்து வருவதை பார்வையிட்டு வேர் பகுதி நீர்பாசன முறையில் மல்பெரி மரநடவு பணியினை மாவட்ட ஆடசித்தலைவர் திரு.சி.அ.ராமன்.இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும் பட்டு உற்பத்தி விவசாயிகளுக்கு பட்டு உற்பத்தி குறித்த செயல்விளக்க முகாமினை தொடங்கி வைத்து விவசாயிகளிடம் பட்டு உற்பத்தி குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் விவசாயிகளிடம் கேட்டறிந்தார். பட்டுக்கூடுகளுக்கு தற்போது நல்ல விலை உள்ளது. இதனால் எங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3 இலட்சம் முதல் ரூ.3.5 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கிடைக்கிறது. இதனால் எங்களுக்கு நல்ல இலாபம் கிடைத்து வருகிறது. மாவட்ட பட்டு வளர்ச்சி துறையின் மூலம் இடுபொருட்கள் மற்றும் பட்டு புழு வளர்ப்புக்கு தேவையான சாதனங்கள் யாவும் மானியத்துடன் கிடைத்து வருகிறது என்று விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தனர். பின்னர் மாவட்ட ஆட்சியர் பட்டு விவசாய பரப்பளவினை அதிகரிக்கவும் விவசாயிகளின் வாழ்க்கை பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை ஆண்டு தோறும் எடுத்து வருகிறது. ஆகவே தங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பட்டு வளர்ச்சித்துறை செய்யும் தாங்கள் தொடர்ந்து இந்த விவசாயத்தை மென்மேலும் சிறப்பாக செய்து மற்ற விவசாயிகளையும் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறை திரு.பாலசுப்பிரமணியன், உதவி ஆய்வாளர்கள் திரு.அய்யனார், திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.சங்கர், இளநிலை ஆய்வாளர்கள் திருமதி.அனிதா, திரு.பாஸ்கரன் மற்றும் விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.

11.3.18